
# தந்தை பெரியார் திராவிடர் கழகத் துவக்கம்

## தமிழினத் தந்தை பெரியார் சிறப்பு மலர்







*தந்தை பெரியாரியல் காட்போம்!* *தமிழர் இன மான நலம் காப்போம்!*

# குருதேவர்

**இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை 15**

**[உறுப்பினர்களுக்கு மட்டும்]** **இ. ம. இ. பதிவு எண்: 135/$8^3$**

**வெளியீடு: 26—3—85**

# சிந்திக்க.............

❁ 'காயந்தரி மந்தரம்' - ஆண் பெண் வித்தியாசமின்றி அனைவரும் ஓதலாம் என்று நமது 'குருதேவர்' அறிக்கையில் வெளிவந்த பின்னர்தான்; பிறமண்ணி னரான பிருமணர்கள் விழித்துக்கொண்டனர். இதுவரை ஆண்கள் மட்டுமே கூறலாம் என்று கூறி வந்தவர்கள் அண்மையில் The Hindu வில் ''ஆண் பெண் அனைவரும் காயந்திரி மந்தரம் ஓதலாம்'' என்று வெளியிட்டுள்ளனர்.

❁ .........ஆரவாரங்களும் அரசியல் தேவைகளும் ஒய்ந்த பின்னர் வரப்போகும் காலம் அண்ணாவை சரியான இடத்தில் நிறுத்தி எடைபோடும் அப்போது வரலாற்றின் வடிகட்டிகளையும் தாண்டி இந்த அண்ணா என்கிற நாமம் இப்போது போல் நீடிக்குமா?

ஆனால் அதுவரை நாம் காத்திருக்க முடியாது. காரணம் அண்ணாவின் பாதிப்புக்களும் அவர் வளர்த்து விட்டவர்களும், வளர்த்து விட்டவைகளும் இந்த மண்ணின் நிகழ்காலத்தை ஆட்டிப் படைத்து வருகின்றனர். அது இந்த மண்ணின் எதிர்காலத்திற்கு ஆரோக்கியமாக இல்லை

எனவே அண்ணாவைச் சரியாக விமர்சித்து வைக்க வேண்டிய இடத்தில் நாம் அவரை வைப்பது இன்றைய தேவையாகிறது

நன்றி! சுட்டி 'மாத இதழ் [ஏப்பிரல்' 85] அண்ணா என்கிற மனிதர் என்ற தொடரிலிருந்து

❁ அண்மையில் எழுத்காளர் பி. சி கணேசன் எழுதிய வள்ளலார் இராமலிங்க அடிகளாரைப் பற்றிய ஆராய்ச்சிக்கு' கண்டனமும், விளக்கமும் கேள்வியும் கேட்டு அறிக்கைகள் அச்சிட்டு வெளியிட்டது அனைவரும் அறிந்ததே! இதற்கு ஆதரவோ, நன்றியோ சொல்லத் தெரியாத 'வள்ளலார் திருச்சபையின் மாபெரும் தலைவர். திரு. நா மகாலிங்கம் அவர்கள் எல்லோரும் சமசுக்கிருதம் படிக்க வேண்டும் என்று கூறியிருந்தார்

அதைக் கண்டித்து அவருக்குக் கடிதம் எழுதிய நமது இயக்க அடியான்களுக்கு தனித்தனியாக மூன்று பக்க அளவில் பதினெட்டு பதில் கடிதம் அனுப்பியுள்ளார் அதில் வட ஆரிய பிருமணர்களையும்; வட ஆரிய மொழியையும் ஆதரித்து நாம் கற்றேயாக வேண்டும் என்று கூறியுள்ளார். வள்ளலாரின் பெயரைச் சொல்லி வயிறு பிழைக்கும் இவர் வள்ளலாரைக் கேவலப் படுத்திய போது பதில் சொல்லாத இவர்; இன்று வட ஆரியருக்கு அடிமையாய் மாறி வரிந்துக் கட்டிக் கொண்டு பதில் சொல்லியிருப்பதை அறிந்து கொள்ளுங்கள் இதுதான் இன்றைய தமிழ்த் தலைவர்களின் அனைவரின் நிலை!

❁ மார்ச்சு மாதம் பெரியார் திடலில் (சென்னை) தி கவினரால் பெரியார் திறந்த பல்கலைக்கழகம் துவக்க விழா நடைபெற்றது அவ்வமயம் சமசுக்கிருதம் எவ்வாறு தமிழை அழிக்கின்றது என்பதை உணர்த்த Sanskritisation சமசுகிருத மயமாதல் என்ற தலைப்பில் பல அறிஞர்கள் பேசினர் அவர்கள் என்ன பேசினார்கள்? என்பது பொதுமக்களுக்கு சென்றடையாமல் நான்கு சுவருக்குள்ளே முடங்கி விட்டது. அதுமட்டுமா? தொலைக்காட்சியில் அந்நிகழ்ச்சியை காட்டியபோது பேரறிஞர்கள் சமசுக்கிருதமயம் பற்றி பேசிய பேச்சுக்களை முழுமையாக வெட்டி வெறும் அறிமுக வுரை மட்டுமே ஒளி ஒலி பரப்பினர். இதுதான் இன்றைய தமிழகத்தின் நிலை. அரசும் அவ்வாறே! தமிழ்நாட்டு தமிழ் இயக்கங்களும் அவ்வாறே! தமிழ்த்தலைவர்கள் தமிழ்ப் புலவர்களும் அவ்வாறே!

# தமிழினத் தளபதி கி. வீரமணி அவர்களின்
# இ. ம. இ. பற்றி கருத்துரை

நாள்: 23—3—85 இடம்: பொன்னேரி கன்னையா திருமண
காலம்: காலை 9-45 to 11-40 மண்டபம் வேண்பாக்கம்.

திராவிடர் கழகத்தின் பயிற்சி முகாம் துவக்க விழா தமிழினத் தளபதியின் பேச்சின் இறுதியில்............

''இந்து மறுமலர்ச்சி இயக்கம் - என்ற பெயரில் கல்லூரியில் ஒருவர் பெரிய நோட்டீசு எல்லாம் போட்டுகிறுக்குத் தனமாகக் கேள்விகளை எல்லாம் கேட்டு இருக்கிறார். இவர்கள் பெரியாரை ஒரு நாயன்மாராக எல்லாம் கூறி இருக்கிறார்கள். இவங்க எல்லாந்தான் சங்கராச்சாரியாரின் கையாள்கள் இவர்களை நீங்கள் அடையாளம் காட்ட வேண்டும். ஏனென்றால் இவர்களை இப்படியே விட்டால் நமக்கும் கூட கோயில் கட்டிவிடுவார்கள்.

தமிழருக்காகவும், தமிழுக்காகவும் அவர்கள் ஏதாவது செய்ய வேண்டும் என்றால் அவர்கள் அவர்களின் வழியில் செய்து கொள்ளட்டும். நம்முடன் இணைந்து ஏதும் செய்யத் தேவையில்லை நான் ஏற்கனவே கூறியபடி இவர்கள் நம்மை அணைத்துக் கெடுப்பவர்கள். இவர்கள் முதலில் நம்மிடம் வந்து பெரியாரைப்பற்றி உயர்வாகக் கூறுவார்கள் அதைக்கேட்டு நீங்கள் மயங்கிவிடக்கூடாது இவர்கள் எப்படி சொல்வார்கள் என்றால் ''பெரியார் ஒரு மிகப் பெரிய ஞானி! அவர் உயர்ந்தவர் அதனால் அவர் கூறியவற்றையெல்லாம் நம்மால் கடைபிடிக்க முடியாது என்று கூறிவிடுவார்கள் இவர்கள் ஏன் இப்படிச் செய்கிறார்கள் என்றால் நாம் இவர்களை விமரிசித்தால் அதன் மூலம் விளம்பரம் தேடிக்கொள்ள எண்ணுகிறார்கள். இந்த நிலையில் இவர்களை நாம் விமரிசிக்காமல் அலட்சியப் படுத்த வேண்டும்.

நான் பதில் சொல்லக்கூடிய அளவுக்கு இவர்கள் ஒன்றும் பெரிய ஆட்கள் இல்லை. வேனும்னு பின்னால் தகுதி வந்தால் பாரத்துக் கொள்ளலாம். இவர்கள் கேள்விகளுக்கு நான் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இங்குள்ள நண்பர்களே பார்த்துக்கொள்வார்கள்............ (கை தட்டல்......)

—ஒலிப்பதிவு வழங்கல்
**இ. ம. இ. செயற்குழு**

---

உதயமாகும் பிறிதொரு அமைப்பு

# தந்தை பெரியார் திராவிடர் கழகம்

இந்து மறுமலர்ச்சி இயக்கம் தனது துணைப்படைகளில் மேலும் ஒன்றைத்-தோற்றுவிக்கின்றது இக்கழகம் சமுதாய அரசியல் சிந்தனைகளைத் தோற்றுவித்து அவற்றின் நலனுக்காகப் போராடவும் மாற்றுச்சிந்தனைகளைத் தோற்றுவித்து மறுமலர்ச்சிக்கு வித்திடவும் அமைக்கப்படுகின்றது.

**தோற்றுவாய்;**

பல்வேறு வகையான சமுதாயப்பணிகளும் பகுத்தறிவுப் பகலவன் ஈ. வெ. ரா வின் புரட்சிகரமான கருத்துக்களையும் புதுமைத்திட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டே நாம் நிறை வேற்ற வேண்டியிருப்பதால் நமக்கும் தமிழினத்தலைவர் பெரியார் ஈ வெ ராவுக்குமுள்ள பிடிப்பினையும், தொடர்பினையும் நிறுவன நிர்வாக கட்டமைப்புகள் மூலம் உலகுக்கு விளக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டிருக்கிறது. 6ம்பக்கம்பார்கக

# யார் பெரியார்......! யாருக்குப் பெரியார்!

அண்மையில் **'ஞாலகுரு சித்தர் கருவூரார்'** அவர்கள் எழுதியிருக்கும் நூல் யார் பெரியார்! யாருக்குப் பெரியார்! விரைவில் வெளிவர உள்ளது. இன்றைய தினம் மாபெரும் சீர்திருத்த வீரர் பெரியார் ஈ.வெ.ரா அவர்களின் அனுபவப் பூர்வமானச் சிந்தனைகளை செயல்களை திட்டமிட்டு மூடி மறைத்து வருகின்றனர் இன்றைய திராவிடர் கழகத்தின் தலைவரையும்; அவருடைய தொண்டர்களையும் பிடிக்காத அல்லது ஒத்துப்போகாத தலைவர்களும், இன்றைய திராவிடர் கழகத் தலைமையின் போக்கைக் கண்டிக்க இயலாமலும்; இணைந்திருக்க முடியாமலும் இருக்கின்ற தொண்டர்களும் இனிமேலாவது ஒன்றிணைந்து **சமுதாயப் பணி** ஆற்றிட முன் வரவேண்டுகின்றோம்.

மேற்கண்ட பெரியார் இயக்கத் தோழர்களுக்கும் நமது இயக்கத் அடியான்களுக்கும் பெரியார் ஈ.வெ.ரா, அவர்களின் வீரதீர வரலாற்றை மீண்டும் நினைவு கூறும் வண்ணமாகவே இந்நூல் தீட்டப்பட்டுள்ளது. அந்நூலிலிருந்து சில பகுதிகளை எடுத்து அளிப்பதன் மூலம் அனைவரும் பெரியாரின் போக்கை உணர்ந்து தமது சமுதாய நலப் பணிகளை அமைத்திட வேண்டுகின்றோம்.

............இத்திருநாட்டில் அன்னியரால் தோற்றுவிக்கப்பட்ட இயக்கமே இந்தக் 'காங்கிரசு இயக்கம்' இந்த இயக்கத்துக்கும் இதன் தலைவர்களுக்கும் தனிமனித வாழ்வு, சமூக வாழ்வு பற்றி அக்கறையில்லை, இத்திருநாட்டில் தீண்டாமைக் கொடுமை, சாதி வெறி; உயர்வு தாழ்வு வேற்றுமை வெறி, தலைவிரித்தாடிய போது 'நீதிக்கட்சி (Justice Party) கூடச் சீர்திருத்தப் பணியில் ஈடுபவில்லை மகாத்மா காந்தி கூட 'இந்து தர்மம்' என்று கூறிக கொண்டு பிருமணர்களையே ஆதரித்தார் என்று முன்னுரையோடு சுயமரியாதைச் சங்கத்தைத் தோற்றுவித்தும்; இப்படிப்பட்ட பிற்போக்குப் பண்புகளைத் தட்டிக் கேட்டுப் போரிட்ட சீர்திருத்தப் பெருந்தலைவரே பெரியார் ஈ.வெ.ரா.

............1928-இல் சைமன் கமிசன் இந்தியா வந்தபோது 'இந்தியாவுக்கு உடனடியாகத் தேவைப்படுவது சமுதாயச் சீர்திருத்தமே தவிர அரசியல் விடுதலையல்ல; அரசியல் விடுதலையால் பார்ப்பானும், பணக்காரனும் மக்களை அடிமைப்படுத்திச் சுரண்டிக் கொழுப்பார்கள்- குழந்தைக் கையில் கத்தியைக் கொடுப்பது போன்ற செயலே! பக்குவப்படாத மக்களுக்கும் சுதந்திரம் தருவது...........என்று மிகத் தெளிவாக அரசியல் பித்தலாட்டத்தை எதிர்த்து விமர்சனம் செய்த சிந்தனைச் சிற்பியே பெரியார் ஈ.வெ.ரா.

.........காங்கிரசு கட்சியும் அதன் தலைவர்களும் பார்ப்பானின் சனாதன தர்மத்தை நம்பிச் சாதி வெறிகளையும், தீண்டாமைகளையும் வளர்த்துக் காத்துவந்ததை, இந்தியத் துணைக் கண்டத்திலேயே தனியொரு மனிதராக எதிர்த்துக் கண்டித்துக் குரலெழுப்பியும் அறிக்கை விடுத்தும் சுயமரியாதை உரிமைப் போர் நிகழ்த்திய மாவீரரே பெரியார் ஈ.வெ.ரா. இவர் வாய்ச்சொல் வீரரல்ல என்பதை நிலைநாட்டிட 1927-இல் திருநெல்வேலி மாவட்ட சேரன் மாதேவியில் வ.வே.சு. அய்யர் நடத்திய குருகுலத்தில் 'சாதிப்பாகுப்பாடும் சாதி வேற்றுமையும் சாதி ஏற்றத்தாழ்வும் தீண்டாமைக் கொடுமைகளும் தலைவிரித்தாடியதை எதிர்த்துத் தானே போர்க்கோலம் பூண்டு அக்குருகுலத்தை நொறுக்கித் தூள் தூளாக்கித் காற்றில் பறக்க விட்டுச் சிறந்த சீர்த்திருத்த தளபதியாக விளங்கியவரே பெரியார் ஈ.வெ.ரா.

.........1936-இல் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் இந்தியாவிலுள்ள சாதி போராட்ட நிலைகளை விளக்கி சாதி வெறிகளையும் தீண்டாமைக் கொடுமைகளையும் நிலையாகத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றால் இந்தியாவிலுள்ள சாதிப் பிரிவினை அமைப்புக்களை அடியோடு ஒழித்தேயாக வேண்டும் என்ற கருத்தினைத் தெளிவாக விளக்கி Annhilation of Caste என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் ஒரு நூலை எழுதினார்'

காந்தியும் காங்கிரசாரும் மிகத் திறமையாக அந்த நூலின் பிரதிகளை விலை கொடுத்து வாங்கி எரித்துச் சாம்பலாக்கி அம்பேத்காரின் கருத்தும் புகழும் பரவமுடியாமல் செய்துவிட்டனர். அந்தச் சூழ்ச்சியினை அறியாத அம்பேத்கார் விரைந்து அந்த நாலுக்கு மறு பதிப்புக்களை அச்சடித்து வெளியிடாமல் ஏமாளித்தனமாக இருந்திட்டார் பிருமணர்கள் தங்கள் விருப்பப் படியே காந்தியும் காங்கிரசும் செயல் பட்டு; தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்காக 'உலக அளவில் கருத்துப் புரட்சி செய்வதில் (The Idealogical Revolution) தங்களால் முயன்ற மிகப் பெரிய இருட்டடிப்பினை வெற்றிகரமாக பிறர் அறியாவண்ணம் செய்து முடித்ததற்கு மகிழ்ச்சிக் கொண்டாடினர்கள் இப்பேருண்மையினை சமுதாயச் சீர்திருத்தப் பணியில் மிக நுட்ப திட்பமாக ஈடுபட்டிருநத பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் அந்நூலைத் தமிழில் ''சாதியை ஒழிக்க வழி'' என்ற தலைப்பில் மொழி பெயர்த்து வெளியிட்டார்.

.........பெரியார் ஈ.வெ ரா. அவர்கள் தான், இந்தியத் துணைக் கண்டத்து அரசியில் விடுதலைக்கு முன்பே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மேல் சாதிக்காரர்களிடமிருந்தும், சூழ்ச்சிமிகு சுரண்டல்கார பிருமணர்களிடமிருந்தும் சமூக ரீதியாக, மத ரீதியாக விடுதலை பெற்றேயாக வேண்டும்......... என்று வலியுறுத்திக் கூறினர்

.... இந்தியத் துணைக்கண்டம் முழுவதுமே சமுதாயச் சீர்திருத்தம் செய்யப்பட்டாக வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களின் அவலகேவலங்களும், துயரங்களும் பிறஉரிமைப் பாதிப்புக்களும், எப்படியாவது நீக்கப்பட்டுத் தாழ்த்தப்பட்ட மக்கள் காக்கப்படல் வேண்டும்.........'' என்ற உயரிய குறிக்கோளில் செயல்பட்டவரே பெரியார் ஈ. வெ. ரா. இவர் இந்திய அளவில் பெரிய தலைவரா விளங்கிய காந்தி, தனக்குப் பேரும் புகழும் செல்வாக்கும் வளரும் பொருட்டுத்தான் தாழ்த்தப் பட்டவர்களைப் பற்றிப் பேசுகிருரே தவிர;உண்மையிலேயே அவருக்கு தாழ்த்தப்பட்ட மக்களைக்காக்கவோ.உயர்த்தவோ விருப்பமில்லை அதை மிகத்தெளிவாக'தர்மகர்த்தா முறை'' என்ற சொல்லால் வெளியிட்டார். அதாவது, பிச்சைக்காரர்களிடமும், ஏழைகளிடமும் பெண்களிடமும் இரக்கச்சிந்தனையுடன் தாராளமாகத் தானம் செய்பவர்களாகச் செல்வர்கள் இருக்க வேண்டும்..... என்பதேயாகும். இதன் பொருள் என்ன ? என்றென்றும் தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கவேண்டும். அவர்களுக்கு மேல் சாதிக்காரர்களும் அரசாங்கமும் இரக்கத்தோடு ஒரு சில சலுகைகளைத் தாராளமாக அவ்வப்போது தந்து கொண்டிருக்க வேண்டும் என்ற கருத்தில் செயல்பட்டிட்டார் என்பதே பொருளாகும், இப்படிக் காந்தியையும் காங்கிரசையும் கடுமையாக இந்திய மண்ணில் விமர்சித்த ஒரே ஒரு சிங்கத் தமிழன் தான் அஞ்சாநெஞ்சனை தமிழினத் தலைவன் பெரியார் ஈ. வெ ரா.

---


# வைகாசி மாத பால்குடப் பெருவிழா

## இ. ம. இயின் கொள்கை விளக்க விழா

ஜூன் மாதம் 2-ந் தேதி

காரியேந்தல்பட்டியில்
(மதுரை கொட்டாம்பட்டிக் கருகில்)

அனைவரும் வருக! அருளை அநுபவப் பொருளாகப் பெறுக!!

*தமிழினத்தலைவர் தந்தை பெரியார் ஈ.வெ. ராவின் கொள்கைகளையும் செயல் திட்டங்களையும், குறிக்கோள்களையும் தீவிரமாகச் செயலாக்க வேண்டிய அவசர அவசிய நிலைமை உருவாகியிருக்கின்றது. எனவே நாம் எவ்வளவு தான் சொல்லாலும் செயலாலும் பாடு பட்டாலும் பெரியாரின் பெயரைச் சொல்லிக் கொண்டு சுகவாழ்வு வாழும் சுயநலக்கும்பலின் கொள்ளை மனமும், கோழைச் செயலும் நமக்கு முழுவெற்றி கிடைக்காமல் செய்கின்றன.*

*அண்மையில் திராவிடக் கழகப் பொதுச் செயலாளர்* **தமிழினத் தளபதி கி. வீரமணி** M A B.L *அவர்கள் நமது செயற்குழுவைச் சந்திக்க மறுத்தும், நம்மைப் பற்றித் தவறுனக் கருத்துக்கள் கூறியும் தமிழினநல விரோதமாகவும் செயல்பட ஆரம்பித்து உள்ளார். எனவே பகுத்தறிவுப் பகலவன், சுயமரியாதைத் தமிழினத் தந்தை, தந்தை பெரியார் ஈ.வெ ரா. அவர்களின் ஆதரவாளர்கள் அனைவரையும் நமது தலைமையின் கீழ் ஒன்று திரட்டியேயாக வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.*

*மேலும் பெரியார் ஈ. வெ. ரா அவர்கள் எந்த வொரு தனி அமைப்புக்கோ இயக்கத்துக்கோ குழுவுக்கோ கொள்கையினருக்கோ வட்டாரத்தினருக்கோ மட்டும் உரியவர் என உரிமை பாராட்டப் படுவதற்கு உரியவரல்ல அவர் அனைத்துக்கும் அனைவருக்கும் பொது வானவர் அவரே தமிழ்ச் சமுதாயத்தின் இன்னல், இழிவு, இடுக்கண், இயலாமை, இல்லாமை என்கின்ற இருள்கள் அனைத்தையும் அகற்றுகின்ற பகுத்தறிவுப் பகலவன் எனவே சுயநல மேகங் கள் பதவி ஆசை மேகங்கள், புகழாசை மேகங்கள்......... முதலிய பலவகை மேகங்கள் மூடி மறைப்பதை தடுத்தேயாக வேண்டும்*

*இதற்காகவே அவசர அவசியமாக 'தந்தை பெரியார் திராவிடர் கழகம்' என்கின்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது இந்த புதிய அமைப்பே புதிய திராவிடக் கழகமே பெரியார் ஈ வெ. ராவின் உண்மையான திராவிடர் கழகம் என்பதை மக்கள் உணருமாறு செயல்படுவோம்.*

---

# தன்வந்திரி தரும் பாரதக் காட்சிகள்

திரேதாயுகத்தில் தோன்றிய நவநாத சித்தர்களில் ஒருவராகிய **இராமதேவர்** சிறந்த சிவ பத்தராக இருந்ததால்தான் சிவசத்தி, சித்தி முத்தியாளனான இராவணேசுவரனை வெல்ல முடிந்தது என்ற பேருண்மைக்கு விளக்கமாக துவாபரயுகத்து நவநாத சித்தர்களில் ஒருவனான கண்ணதேவன் முறைப்படி ஆறு காலம் சிவனைத் தொழுதும், ஒன்பது வகைக் காடுகளிலும் உரிய உச்சிவேளைகளில உரிய பருவகாலங்களில் சிவசத்திப் பூசைகளைச் செய்தும் **இராமனைப் போலவே சுடலைச் சாம்பலையே** அணிந்து செயல்பட்டதால் தான் ஆயுதமேந்திப் போரிட்ட போர்களிலும்ஆயுத மேந்தாமல் பேரிட்ட பாரதப் போரிலும் நிலைத்தற்குரிய பெரிய வெற்றிகளைப் பெற்றிட்டான்.

எனவே தான் திரேதாயுகத்தில் சூரிய குலத்தின் காகபுசுண்டரின் குலம் விளங்க வெற்றி வீரனாக வாழ்ந்த நவநாத சித்தனாகிய **அயோத்தியத் தயரதன்** மகன் இராமத்தேவன், தன்னுடைய வாழ்வால் சகோதர, நட்பு தாய் தந்தை -யரைப் போற்றல், அரசநீதி காத்தல், அந்தணர் பெருமை ஓம்பல், தோழமை வளர்த்தல், பெண்ணுயர்வு விளக்கல், தவவலிமை. நிலைநாட்டல், தேவசாபவெற்றி உணர்த்தல், இல்லறப் பாங்கு உணர்த்தல் தலைவன் தொண்டன், உறவுநிலைவிளக்கல் பத்தியின் வலிமை விளக்கல்.........முதலிய அறங்களை என்றென்றும் உலகுக்குப் புரியுமாறு வாழ்ந்தது போலவே, துவாபரயுகத்து சந்திரகுலத்து கருவூரரின் குலம் விளங்க வெற்றி வீரனாக வாழ்ந்த நவநாத சித்தனாகிய மாயக்கண்ணத் தேவனும் தன் வாழ்வின் மூலம் மேற்கூறிய அறங்கள் அனைத்தையும் தொடர்ந்து உலகுக்கு உணர்த்துபவனாகவும், புரிவிப்பவனாகவும் உள்ளான். எனவே பதினெண் சித்தர்களின் வழிவந்த தமிழ்மொழி 'தமிழினம், தமிழ்நாடு என்ற முக்கோண பீடத்தால் காக்கப்படும் 'சித்தர் நெறி' எனும் **உண்மையான இந்து மதத்திற்கு** நவநாத சித்தர்களான இராமதேவனின் வாழ்வியலும், **கண்ணதேவனின்** வாழ்வியலும், உயிரும் உடலும் ஆக என்றென்றும்இருந்திடும்.

இப்பேருண்மையினை இந்துக்கள் காலப் போக்கில் மறக்க, **துறக்க** நேரிட்டாலும் தமிழர்கள் மறக்காமல் துறக்காமல் காக்க வேண்டும். மேற்படி இரண்டு காதை நிகழ்ச்சிகளும், தத்துவங்களும் செழித்தோங்குவது பொறுத்துத்-தான் இந்துமதத்தின் மூலவர்களான தமிழர்களின் விழிச்சி விளைந்திடும் இவற்றை மருந்துகள் தருகின்ற **'தன்வந்திரி'** மானுட இனத்துக்கு விருந்தாகத் தருகின்றான்.

# குருபக்தியே சித்திக்கு வழி

**[தொகுத்து வழங்குபவர் பரமாச்சாரியார் நெ. சேவுகன்]**

**[சென்ற இதழ் தொடர்ச்சி]**

ஆமை வேகத்தில், அவரவர் அறிவுப்படி, ஆலோசனைப்படி, விருப்பப்படி அலட்சியமாகச் செயல்படக்கூடாது அப்படிப்பட்டவர் குருவின் பின்னால் வர இயலாது குருவின் வாரிசு என்ற தகுதியையும் பெறமுடியாது. அதாவது புரட்சித்தலைவனின் சொல் உடனே செயலாக வேண்டும். இங்கே நாம் குறிப்பிடுகின்ற புரட்சித்தலைவன் யார் என்றால்; குரு, குருவின் வாரிசுகள், குருவாணை பெற்றவர்கள்.........என்பவர்களைக் குறிக்கும், எனவே எந்நேரமும் ஒரு அடியான், அடியாள், அடியார் என்றால் சுறுசுறுப்பு, விறுவிறுப்பு, வேகம், பணிவு, குரு என்ற நம்பிக்கை, பொறுப்புணர்ச்சி, புத்திக்கூர்மை,......முதலிய பண்பு நலன்களைப் பெற்றிருக்க வேண்டும்.

சொன்னதை உடனே செய்பவன்; கீழ்ப்படிதல், தலையைக்கேட்டாலும் தயங்காது தருபவனால் தான் அமையப் போகிற அருளாட்சியில் பங்கேற்க முடியும். போலீஸ் கூட்டம் தேவையில்லை; வேலி போட்ட விவசாயம் தேவை என்பது போல்; கட்டுப்பாடு கண்டிப்பு அவசியம் தேவை எனவே, குருவின் கண்டிப்பை எந்தவொரு அடியானும் தவறாகப்புரிந்து கொண்டுமனம் நோக வேண்டாம் என்று அடியவனின் அநுபவத்தைக் கூறுகிறேன்

**Now or Never; இப்பொழுதே செயல்படு**

இல்லாவிட்டால் எப்போதும் செயல்படமாட்டாய்'' என்ற அரிய அறிவுரைப்படி தொண்டர்களைத் தயாரித்ததால்தான் இலெனினால் ஒரு மாபெரும் புரட்சியைச் செய்ய முடிந்தது. புரட்சி வீரன் ஒரு நொடி சோம்பல், அலட்சியம், காலதாமதம் கீழ்ப்படியாமை.........உடையவனாக இருந்திட்டால் அவன் அழிவதோடு புரட்சிப் படைக்கே பெரிய நட்டத்தை உண்டாக்கி விடுவான். நாம் ஒரு மாபெரும் சமுதாயப் புரட்சி, செய்யப் போகிறவர்கள் அன்பு, இரக்கம், விட்டுக் கொடுத்தல்,... ...முதலிய போக்கால் தவறானவர்களைப் புரட்சிப்படையில் சேர்த்து விடக்கூடாது. ஆரம்பத்திலே பணிவு, பத்தி, கட்டுப்பாடு, கீழ்ப்படிதல், உடனே செயல்படுதல்.........முதலிய பண்புகள் இல்லாதவர்களால் குருவின் போதனைகளைச் செரிக்க இயலாது எனவே, குருபத்தி இருந்தால் தான் அனைத்தும் சித்தியாகும்.

''வாய்ச் சொல்லில் வீரர்'', ''வாய் வேதாந்தமே இந்து மதம்'', ''இந்து மதம் ஏட்டுச் சுரைக்காய்'', கோயில்களில் இருப்பது கருங்கல்தான்'', ''இந்துக்கள் பிறமதக்கடவுள்களையே வணங்கு கின்றனர்''........ முதலிய கெட்டநிலைகள், பழிகள் ஒழியப்பாடுபடும் அருளாளர்களே நாம் நம்மை அருளாளர்களாக உருவாக்குவது குருவே......

(வளரும்)

---

**கேள்வியும் நானே பதிலும் நானே (8-ம் பக்கம் தொடர்ச்சி)**

*என்று சத்தி நீ பாதநிலை பெற்றவர்க்கு அறிவுரை, அருளுரை வழங்கப்படுகிறது குருபாரம்பரியத்தில்.*

*எனவே சித்தர்களின் தூய, வாய்மைமிகு உயர்தனிச் செம்மொழியான தமிழ் மொழியின் பழமையான சொற்களையும் சொற்றொடர்களையும் தெரியாத, புரியாத...........தமிழ் வல்லார்கள் திருமூலரின் அழகிய, ஆழமான பொருள்மிக்க அமுதத் தமிழ் சொற்களையும்; சொற்றொடர்களையும் வடமொழிச் சொற்களாகவும் சொற்றொடர்களாகவும் தவறுதலாக கூறுகிறார்கள், இது தவறு கண்டிக்கத்தக்கது வருந்தத்தககது. முறையாகக்கற்று நிறையான தமிழ்புலமை இல்லாதவர்களாக இது போல் எண்ணற்ற துரோக விரோத கருத்துக்களும் செயல்களும் தொடர்ந்து நிகழ்கின்ற இவற்றை கண்டித்தேயாக வேண்டும்.*

*குறிப்பு:- தமிழில் இலிங்கம், சத்திலிங்கம், சிவலிங்கம் என்றுமூன்று சொற்கள் உள்ளன இலக்கு — குறிக்கோள், இலங்குதல் — ஒளிர்தல், விளங்குதல்; இலிங்கம் — ஆவி ஆன்மா உயிர் எந்த நிலையில் உள்ளன என்பதை விளக்கும் சின்னம், அடையாளம், ஆனால், அப்பாவி, அரைகுறைத் தமிழ் வல்லார்கள் 'லிங்கம்' என்ற வடசொல்லே 'இலிங்கம்' என்று தமிழில் எழுதப்படுவதாகக் கூறுகிறார்கள்*

*வெட்கம்! வெட்கம்! வெட்கம்! வேதனை! வேதனை! வேதனை! சோதனை! சோதனை! சோதனை!*

# கேள்வியும் நானே பதிலும் நானே

1. இன்றுள்ள நமது மதத்தலைவர்களில் சிலர் மொழி வெறிகூடாது மதம், பத்தி முதலிய -வை மொழிவெறிக்கு அப்பாற்பட்டவையாக இருக்க வேண்டும் என்று கூறுகிறார்கள் இது பற்றி தங்கள் கருத்து என்ன?

பதில்; இது மாபெரும் தவறான கருத்து இது தற்கொலைக்குச் சமமான கருத்து மொழிதான் அருளுலகில் விழியாக, வழியாக, வழித்துணையாக, வழிகாட்டியாக, வழிப்பயனாக இருக்கின்றது. அந்தந்த மொழியில் தான் அந்த மொழியில் வாழ்ந்து, மாண்டு, தெய்வங்களாக, கடவுள்களாக, ஆண்டவர்களாக, பட்டவர்களாக, தேவர்களாக, தேவதைகளாக.........வாழும் அனைத்துவகை யினருடனும் தொடர்பு கொள்ளமுடியும்.

குறிப்பு: இறப்புக்குப் பின் அருவமாக, அருவுருவமாக, உருவமாக வாழுபவர்கள், மனிதர்களாக வாழும் பொழுது என்னென்ன மொழிகளை கற்றிருந்தார்களோ அதோ மொழியறிவினைத் தான் பெற்றிருப்பார்கள் இது தான் உண்மை! உண்மை!! உண்மை!! இதன் அடிப்படையில் தான் பதினெண் சித்தர்கள் தங்களுடைய பூசாவிதி வாசகங்களையும், நெறிமுறைகளையும், விதிகளை யும்......... உலகில் உள்ள எல்லா மொழிகளும் மொழிபெயர்த்துதான் மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தெளிவாகக் கூறியுள்ளார்கள் அண்டபேரண்டங்கள், பிண்டங்கள், பயிரினங்கள், உயிரினங்கள், முதலிய அனைத்தையும் இணைக்கக் கூடிய அடிப்படை ஒலிகள் அனைத்தும் எழுத்து வடிவம் பெற்றதுதான் பதினெண் சித்தர்களின் தாய்மொழியான தமிழ், அதுவே இம்மண்ணுலகின் முதல் மொழி, மூலமொழி, அருளுலக பூசை மொழி.

2. சிலர் மதமென்பது இனம், நாடு மொழி......... முதலிய அனைத்தையும் கடந்தது என்று கூறுகிறார்களே தங்கள் கருத்து என்ன?

பதில்:- இது ஒரு மாபெரும் ஏமாற்றுக்கருத்து, சூழ்ச்சிக்கருத்து சுரண்டல் கருத்துவயிற்றுப்பிழைப்பு கருத்து தங்களுக்கென்ற நாடு இல்லாத நாடோடிகளின் கருத்து. ஏனெனி பதினெண் சித்தர்கள் ஒரு இனத்தின் பண்பாடு, நாகரிகம், வரலாறு, முதலிய அனைத்தையும், முறையாகவும், நெறி யாகவும், விளக்குவதும்; வளப்படுத்தி, வலிமைப்படுத்தி, பொலிவு படுத்துவதும் மதம் தான். மதத்தால் தான் மொழிப்பற்று, இனப்பற்று, இனஒற்றுமை, நாட்டுப்பற்று, நாட்டு உரிமை, சமுதாய விடுதலை, பொருளாதாரச் சமத்துவம், வீழ்ச்சிகளை வீழ்த்தும் புரட்சிநிலை.........முதலி யவைகளை எல்லாம் உருவாக்க முடியும் என்று மிகத்தெளிவாகக் கூறுகின்றனர் பதினெண் சித்தர்கள்.

3. திருமூலர் தமது திருமந்திரத்தில் பெரும்பாலும் சமசுக்கிருத மொழியைத்தான் பயன் படுத்தியிருக்கிறார் என்று கூறுவது உண்மையா? இது தான் தமிழில் முதல் வேதம் என்பதால் சமசுகிருதத்தில் இருந்துதான் திருமூலர் கருத்துக்களைக் கடன் வாங்கினாரா?

பதில்;- கடந்த சில நூற்றாண்டுகளாக தமிழ்ப்புலவர்கள் அறிஞர்கள், மேதைகள், பேராசிரியர் கள் முறையாகவும், நிறைவாகவும், பழந்தமிழ் நூல்களில் பயிற்சியும், ஆராய்ச்சியும் இல்லாத வர்களாகவே வாழ்ந்துவருகின்ற காலத்திலும் பெரும்பாலானவர்கள் சமசுக்கிருத மொழியின் அடிமைகளாகவும் ஆரிய மாயையில் சிக்கி தவிப்பவர்களாகவுமே இருந்து வருகிறார்கள். எனவே தான் தமிழ்ச்சொற்களுக்கும் சொற்றொடர்களுக்கும் சமசுக்கிருதசொற்களுக்கும்,சொற்றொடர்களுக் கும் வேறுபாடு தெரியாதவர்களாக இருக்கிறார்கள் இதுபற்றிபல்லாயிரக்கணக்கானசமசுக்கிருத சொற்களை தமிழ் சொற்கள் என்று இன்றைய ஞாலகுரு சித்தர் கருவூரார் எடுத்துக்காட்டி வருவ தை சான்றாகக் கொள்ளலாம்

'சத்தி நீ பாதம் என்று திருமூலர் குறிக்கும் முத்திநிலை சத்தி + நீபாதம் —> என்று சமசுக்கிருதச் சொல்லாகப் பிரித்தே பொருள் சொல்லப்படுகிறது. ஆனால் இது 10வது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் ஆரிய படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியனைக் குறிக்கும் போது ''இவன் சத்தி நீ பாதம் என்ற முத்தி நிலையை'' அடைந்த பிறகே வடநாட்டுப் படையெழுச்சியில் ஈடுபட்டான் என்று தமது அரச பாரம்பரியத்திலும் குருபாரம்பரியத்திலும் குறிக்கிறார்

சத்தி நீ - > இனி நீ சத்தி வடிவாகவே மாறி விட்டாய்; சித்திகளைப் பெற்று நீ சத்தி நிலையாளனாகிவிட்டாய்

பாதம் —> இனி நீ, பிறரின் பாதம் போல்; பணிவுடன் தான் செயல்படல் வேண்டும் யாருக்கும் சாபம் கொடுத்தல் கூடாது

# பதினெண் சித்தர் திருவாசகம்

## பதினெண் சித்தர் திருவாசகம் சென்ற இதழ்த் தொடர்ச்சி

77 நெறியோடு சென்று நின்றது சம்பந்தன் வேண்டுதலால்
78 நீரின் மேல் நடந்தான் அருளாட்சித், தமிழ்முனி
79 திருஞான சம்பந்தன் விரைந்தே! விரைந்தே! விரைந்தே!
80 ஒரு குடைக் கீழ் உலகாளும் இந்து மதம் உணர்த்தவே!
81 நெருப்பால் எரியாது நீரில் வெல்லப்படாததுமாக
82 அருளூறு அமுதத் தமிழின் இறை மாட்சியேடு
83 நீரினின்று திருஞான சம்பந்தன் கையோடிப்புகுந்ததே
84 கரைசேரச் சம்பந்தன் கட்டித்தழுவ இலிங்க மொன்று
85 விரைவாகவே தரையுள்ளிருந்து வெளிப்பட்டு நின்றது
86 தரையோடு தன்னுடல் கிடத்தித் தண்டமிழ் முனி
87 நிறைவான இறைவழிபாட்டைச் சித்தர் நெறிப்படி
88 கருவாக்கு கருவாசகம் குருவாக்கு குருவாசகம்
89 தருவாக்கு தருவாசகம் திருவாக்கு திருவாசகம்
90 அருள்வாக்கு அருள்வாசகம் மருள்வாக்கு மருள்வாசகம்
91 ஓதியும் வாசித்தும் ஒருசாமம் முறையே நிறைவு செய்தார்
92 குறை மனச் சமணர்கள் அதற்குள் கழுவிலேறிக்
93 குருதி கொட்டி இறுதி செய்தார் சமசுக்கிருத இருளுக்கு
94 குமரனும் இராமனும் கண்ணனும் குருதி கொட்டியே
95 புரிந்த மறவேள்வியோ டொக்குமே இதுவும்
96 விரிந்த செய்தியோடு தத்துவம் திருஞானசம்பந்தன்
97 பாடலிலும் பிற அடியவர் ஏட்டிலும் காணலாம்
98 சரித்திற ஒப்புதல் வரலாறு குருபாரம்பரியமே கூறும் —முற்றும்

குருமகா சன்னிதானம், சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர், பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதியின் குருபாரம் பரியத்திலிருந்து எடுக்கப்பட்ட வாசகங்கள் சித்தர் ஏனனம்பட்டியார் உ. இராமசாமிபிள்ளையின் எழுத்துக் குவியல் களிலிருந்து எடுக்கப்பட்டது.

'' பண்ணார்ந்த சம்பந்தன் பைந்தமிழ் ஏடு
பொன்னென அனலில் ஒளிவிட்டு நின்றே
விண்ணார்ந்த இந்து மதமும் அருளமுதத்தமிழும்
தண் பொழிலாய்ச் செழித்து வளர்ந்தன வாழ்ந்தன''

'' நற்றமிழ் சம்பந்தன் தெய்வவாசக ஏடு
நாற்றிசையோர் காண நாகமென எழுந்து
ஆற்றில் நீந்தி வென்று ஏடகத்தே நின்றது
போற்றியே தமிழும் இந்துமதமும் செழித்தன ''

குறிப்பு:- திருஞான சம்மந்தரைப் பற்றிய குருவாசக வரிகள், இவை குருபாரம்பரியத் -திலிருந்து எடுக்கப்பட்டவை.

எழுதியவர்:- சித்தர் காக்கையர் ம. பழனிச்சாமிபிள்ளை
இதனை வழங்குபவர்:- ஞாலகுரு சித்தர் கருவூரர்

# விநாயகர் - பிள்ளையார் - கணபதி

அனாதி காலத்தில் அதாவது கிரேதாயுகத்திற்கு முன்பு வாழ்ந்த சிவ பெருமான்களில் ஒரு சிவபெருமான் தாந்தரீக யந்தரீக மாந்தரீக பூசைகள் பற்றியப் பேருண்மைகளை வேதங்களாக வழங்கியபொழுது ஒரு விநாயகர் அவரருகில் உட்கார்ந்து பொறுப்போடும் பொறுமையோடும் அனைத்தையும் எழுதி முடித்தார் என்ற குறிப்பு குருபாரம்பரியத்தில் காணப்படுகின்றது, ஆனால் இவர் கணபதியா? விநாயகரா? பிள்ளையாரா? என்று வேறுபடுத்தி உணர முடியவில்லை இன்னும் சொல்லப் போனால் இவர் ஆண் தெய்வமா? பெண் தெய்வமா? என்று கூடத் தெரியவில்லை.

மேற்படி நிகழ்ச்சி போல் துவாபரயுகத்தில் வியாசர் பாரத கால நிகழ்ச்சிகளை உடனிருந்து கண்டு வெதும்பி அழுது புலம்பி ஆற்றிக் கொண்டிருந்த பொழுது அக்காலத்தின் புகழ்பெற்ற மருத்துவரும் அரசாங்க மருத்துவரும் சித்தர் கருவூரர் வழிவந்த வருமான தன்வந்திரி அவர்கள் வியாசரைத் தனது உணர்வுகளை யெல்லாம் அப்படியே உரைநடை கலந்த கவிதை வடிவில் கூறுமாறும் அவற்றைத் தனது மந்திரவலிமையினால் வரவழைத்த பிள்ளையாரைக் கொண்டு ஏட்டில் எழுதுமாறும் செய்தார் என்றொரு குருபாரம்பரியச் செய்தி இருக்கின்றது.

புறநானூற்றுப் பாடல்களின் காலத்துக்குரிய சங்ககாலப் புலவரான வியாசர் தமக்குத் தெரிந்த சமசுக்கிருத மொழியில், பாரத கால வியாசர் கூறப்பிள்ளையார் எழுதிய கதைகளையும், புராணங்களையும் சமசுகிருத மொழியில் மொழிபெயர்த்தார் இந்தமொழிபெயர்பு மிகவும் சுருங்கியதாகவும், நிறைய பிழைகளை உடையதாகவும் குறைகளையும், தவறான தத்துவங்களையுடையதாகவும், வட ஆரியருக்குரிய அண்டப்புளுகுகளையும், ஆகாசப்பொய்களையும் ஆபாசக் கற்பனைகளையும், மூடக் கருத்துக்களையும் கொண்டதாக இருக்கின்றது. இதனைக் கொண்டுதான் பாரதகாலத்து வியாசர் கூற அவற்றை ஏட்டில் எழுதிய பிள்ளையார் நல்ல பொறுப்புணர்ச்சியும், பொறுமையுணர்ச்சியும் உடைய ஒரு பெண்ணாகத்தான் இருக்க வேண்டுமென்று எண்ணவேண்டி இருக்கின்றது.

பதினெண் சித்தர்களின் நூல்களிலும், குருபாரம்பரிய வாசகங்களிலும் இரண்டு, மூன்று, நான்கு;...........முகங்களை உடைய பிள்ளையார், விநாயகர், கணபதி, உருவங்களைப்பற்றிய குறிப்புகள் பல இருக்கின்றன மேற்படி உருவங்கள் கருவறை மூலவர்களாகவும் கோயில் துணை மூலவர்களாகவும் குறிப்பிடப்படுகிறார்கள் மேற்படி மூவருக்கும் சிங்கம், புலி, ஆடு, மயில், கழுகு காக்கை, ஆமை, தவளை........முதலியவைய வாகனங்களாக குறிக்கப்படுகின்றன என்ற கருத்து எமது நினைவில் இருக்கின்றது

மேற்படி மூவர் பற்றிய செய்திகள் மறைந்து விடக்கூடாது என்ற அவசரத்தாலும் அவசியத்தாலும் இக் கட்டுரையைத் தயாரித்துள்ளோம் இவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது அவசியமில்லை இவற்றை நன்கு சிந்தித்து மேலும் ஆராய்ந்து உண்மைகளை எடுத்துக் கூறினால் யாம் ஏற்றுக்கொள்ளத் தயாராக உள்ளோம் மேற்கண்டவைகளே எம்மிடம் உள்ள செய்திகள் குறிப்புகள்

—ஞாலகுரு சித்தர் கருவூரர்

---

## குருபாரம்பரியம்

இராமன் அரக்கர் போர், கண்ணன் நிகழ்த்திக் கொடுத்திட்ட பங்காளி போர் ........முதலியவற்றின் மரபையொட்டித் தமிழர்களின் மறுமலர்ச்சிப்போர் சிறுகசிறுக ஆரம்பிக்கப்பட்டேயாக வேண்டும். அதற்குரிய பாசறைகளும் மாடி வீடுகளுமே நமது நாற்பத்தெட்டு வகையான வழிபாட்டு நிலையங்கள் (கோயில்கள்)

6 வாய்பேசத் தெரிந்த தமிழனும், வாள்வீசத் தெரிந்த தமிழனும் வாழ்வியலை வணிகமாக்கிடத் தெரிந்த தமிழனும்.......வாய்பொத்திக் கைகட்டி அன்னியரிடம் காவலனாய், கங்காணியாய், காவடியாய், சேவகனாய், தொண்டனாய், எடுபிடியாய், ஏவலாளியாய்,.. ...ஏவிவிட்டதைச் செய்யும் நன்றியுள்ள நாயாய் வாழுவதைக் கண்ட பிறகும் தமிழனுக்குத்தன்மான உணர்வோ, தாய் மொழிப்பற்றோ, இனப் பற்றோ, இன ஒற்றுமையுணர்வோ, நாட்டுப்பற்றோ, நாட்டுரிமையுணர்வோ, வரலாற்று பெருமித உணர்வோ, உரிமை வாழ்வில் நாட்டமோ!...........ஏற்படுமென்று எண்ணவே முடியவில்லை! முடியவில்லை! முடியவில்லை! ஆனால் இத் தமிழர்கள் எவருமே எண்ணிப்பார்த்திடாத அளவுக்கு ஒற்றுமையும், கட்டுக்கோப்பும், விழிச்சியும், கிளர்ச்சியும், எழுச்சியும், உரிமை நாடும் புரட்சியும் ...........உடையவர்களாக மாற்றிடக்கூடிய வல்லமை இளமுறியாக் கண்டமெனும் 'குமரிக்கண்டத்தில்' பிறந்த இந்து மதத்துக்குண்டு. அம்மதத்தைப் பதினெண் சித்தர்கள் தங்கள் தாய் மொழியான அமுதத்தமிழில் தான் வெளியிட்டார்கள் என்பதைப்புரிந்து தமிழ் மொழியின் செழிச்சிக்கும் ஆட்சி மீட்சிக்கும் உழைத்தால் போதும் தமிழருக்கென்று அருட்பேரரசு அமைக்கப்பட்டுவிடும்! அமைக்கப்பட்டுவிடும்! அமைக்கப்பட்டுவிடும்!

# அன்புள்ளச் சேவுகனுக்கு...... !

## பெரியாரியல் காப்போம்

அன்புச் சேவுக!

மகாத்மா காந்தியைப் போல் பகுத்தறிவுப்-பகலவன் தந்தை பெரியார் தி.க.வை பல முறை கலைத்தார். அதற்கு அவர் கூறிய காரணம், ''என் பெயரைச் சொல்லிக்கிட்டு பொறுக்கி திங்கிற கூட்டம் வளர்ந்து விடக்-கூடாது. நான் யாரோ சிலருக்கு மட்டும் சொந்தக்காரன் என்று ஆகிவிடக்கூடாது நான் சொல்ற கருத்துக்களை சாதி, மதம், கட்சி என்ற வேறுபாடல்லாம் இல்லாம எல்லாரும் சிந்திக்-கணும். செயலாக்க முயற்சிக்கணும். அப்பத்-தான் மடமை யெல்லாம் ஒழியும் பித்த-லாட்டங்களும், ஏமாற்றுக்களும் போகும் இந்த காந்தி கூட சுதந்திரம் வந்திச்சு, காங்கிரசைக்-கலைச்சுட்டேன் என்றாரு. ஆனா ஒரு பயலும் கேட்கவில்லை. ஏன்னா காங்கிரசுக் கட்சி என்று ஒன்றை வச்சுக்கிட்டு நாங்க தான் சுதந்திரம் வாங்கித் தந்தோம். நாங்கதான் சுதந்திரத்-திற்காக கஷ்ட நஷ்ட ப்பட்டோம், எங்களுக்கு ஓட்டுப் போடுங்கன்னு சொல்லி அவனவன் பட்டம் பதவின்னு வாங்கிக்குனு கொள்ளை-யடிகிறானுக! முதல்லே காந்தி சொன்னாப் போல இந்த காங்கிரஸ் கட்சியை ஒழிக்கனும் அப்பத்-தான் இந்த நாட்டிலே நல்லது நடக்கும் இது மாதிரிதான் இப்பவே தி.கவை கலைச்சுட்டேன் அவங்கவங்க விருப்பப்பட்ட கட்சியிலே சேர்ந்து தொண்டாற்றுங்க! நாட்டுக்காக நல்லது செய்யுங்க! தி.க.வில் உள்ளவர் களெல்லாம் காங்கிரசு கட்சியிலே சேர்ந்து பச்சைத்தமிழன் காமராசர் கையை வலுப்படுத்துங்க! * ............''

[* இப்படி பெரியார் அறிவித்ததற் கேற்ப பல தி.க.வினர் காங்கிரசில் சேர்ந்தனர். இப்படிச் சேர்ந்தவர்கள் இன்றைக்கும் இருக்கிறார்கள் இதை இன்றுள்ள தி.க வினரும், காங்கிரசு வாதிகளும் ஏற்றுக் கொள்வார்கள், இது பற்றிய கார்டூன்கள் ஆனந்த விகடனில் காணலாம்.]

இப்படிப் பெரியார் ஈ.வெ.ரா அவர்கள் மிக நுட்பமான தொலைநோக்குடன் தான் உண்டாக்கிய திராவிடக் கழகத்தை கலைத்திட்ட வரலாற்று நிகழ்ச்சியை தெரிந்து கொள்ளாத திராவிடக்-கழகத்தவர்களே நிறைய உள்ளனர், எனவே பெரியாரின் அந்தச் செயலைப் புரிந்து கொள்ளாதவர்களே இன்றைக்கு பெரும்பாலானவர்கள் இருக்கின்றனர் என்பது தவறல்ல, பெரியார் பயந்தது போலவே அவருடைய குறிக்கோள்-களும், கொள்கைகளும் அவருடைய கழகத்-துக்கு மட்டுமே உரியவை என்பது போல் அதனுடைய இன்றைய தலைவர், தளபதி கி. வீரமணி செயல்படுகின்றார், இது மிகவும் வருந்தத்தக்கது. பெரியார் ஈ.வெ.ரா கூறிய கொள்கைகளையும், அடைய நினைத்த குறிக்-கோள்களையும் செயல் வடிவில் வாழவைக்கக் கூடியவர்களையெல்லாம் ஒன்றுதிரட்டிச் செயல் பட வைக்கக்கூடிய தலைமைப் பண்பு, பொது நோக்கு, தீவிரப் போக்கு, ஆர்வமிகு போராற்றல் ........முதலியவைகள் எதுவுமே இல்லா-தவராகத் தான் தலைவர் வீரமணி உள்ளார்.

அன்பு நண்ப!

நண்பர் கி. வீரமணி அவர்கள்; தமிழினத்தின் உரிமைக்கும், பெருமைக்கும் தமிழ்ச் சான்றோர்களின் உரிமைக்-கும் பெருமைக்கும் கடுமையான சோதனைகள் ஆபத்துக்கள் தொடர்ந்து ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன என்று தெரிந்தும், அதற்காகப் பல்வேறு துறையைச் சார்ந்த அனைத்துத் தமிழர்-களையும் ஒன்று திரட்டி உரிமைக்காகவும், பெருமைக்காகவும் இறுதிவரைப் போராடவே-யில்லை. ஏதோ பெயருக்கு ஆங்காங்கே ஒரிரு நாள் போராட்டங்களையும் ஒரு சில அறிக்கைகளையும் வழங்கிவிட்டு தொடர்ந்தோ துணிந்தோ போராடமல் கோழையைப் போல் விலகி ஒதுங்கி எதிலும் பட்டுக்கொள்ளாமல் செயல் பட்டு வருகின்றார்.

நாம் முழுமையான பிருமண எதிர்ப்பாளர் என்பதை உணர்ந்தும் நண்பர் வீரமணி அவர்கள் 'இன்றைய தினம்', தான் 'பிருமணர்களின் எதிர்ப்பாளன் அல்ல; பிருமணிய எதிர்ப்பாளனே' என்று கூறிவருவதோடு; நம்முடைய செயற்குழுவிற்கு பேட்டித் தர (23—3—85) பொன்னேரியில், மறுத்து தன்னை சங்கராச்சாரியாரின் எதிர்ப்பாளனல்ல; தான் ஒரு பிருமணதாசன் என மெய்ப்பித்துக் கொண்டார்

அன்பு நண்ப! நாம் பெரியார் தோற்றுவித்த திராவிடத் கழகத்தை இறுதியாக நம்பியிருந்தோம் அவர்களும் தங்களின் உண்மைவடிவத்தைக் காட்டிக் கொண்டு விட்டதால் வேறு வழியில்லை. நாம் தனித்தே தமிழினத் தந்தை தந்தைப் பெரியார் அவர்களின் மாபெரும் சமுதாய மறுமலர்ச்சிப் பணிகளை கட்டுரைகளாக, கவிதைகளாக, மந்தையிலே உரைகளாக சொற்பொழிவுகளாக வெளிப்படுத்தியே தீரவேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப் பட்டிருக்கின்றோம். ஏற்கனவே உள்ள சமய மறுமலர்ச்சிப்பணியோடு தந்தைப் பெரியாரின் சமுதாயப் பணிகளையும் வெளிப்படுத்திச் செயலாக்குவோம். அன்பு,

**ஞாலகுரு சித்தர் கருவூரார்**

# வணக்கவுரை

ஆட்சி இயலை மாற்றியமைத்துப் புதுமையான முறையில் மக்களுக்கு இயற்கை தரும் சக்திகளனைத்தையும் முழுமையான அளவில் சமமாகபகிர்ந்தளிப்பதே நமது மறுமலர்ச்சித் திட்டத்தின் இறுதி நோக்கம், எனவே இரண்டாந்தர, மூன்றாந்தர அரசியலில் ஈடுபடுதல் நமது நோக்கமன்று; தந்தை பெரியார் ஏழைகளற்ற, மத ஆதிக்கமற்ற இந்தியாவை உருவாக்கி விட்டு பின்னர் தான் விடுதலை வாங்க வேண்டும் என்றார் அதே கருத்தைத் தான் இன்றையதினம் நாமும் கூறுகின்றோம். எனவேதான் உண்மையான இந்து மத நெறிகளின் மூலம் (பிருமணர்கள் கூறும் ஹிந்து மதமல்ல) இந்தியச் சமுதாய நலங்காக்க பல்வேறு சமய - சமுதாய நல அமைப்புக்கள் மூலம் செயல்படுகின்றோம்! இதை அனைவரும் உணர வேண்டும் உணர்த்த வேண்டும்,

இன்றைய தினம், தனியார்த்துறை, அரசுத்துறை, பொதுத்துறை, கல்வித்துறை, கலைத்துறை, விஞ்ஞானத்துறை, அணுவிஞ்ஞானதுறை ...... என அனைத்து துறைகளிலும் பிறமண்ணினரான பிருமணர்களின் ஆதிக்கம் மேலோங்கி வருகின்றது. இதற்கு தமிழ்த்தலைவர்களே அரணாக, காவலாக, உள்ளனர். இதை அனைவரும் உணர வேண்டும்!

அண்மையில் தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று, தொலைக் காட்சியில், 'சமசுக்கிருதமே உயர்ந்த மொழி, தேவமொழி, என்று கூறுகின்ற சங்கராச்சாரியார் நமக்கெல்லாம் வாழ்த்துத் தெரிவித்தார். தமிழ்ப்புத்தாண்டு வாழ்த்துத் தெரிவிக்கக்கூட நம்ம மடாதிபதிகளுக்கு கழகத் தலைவர்களுக்கு யோக்யதை இல்லை' இதை கேட்க நாதி இல்லை, எனவே சிந்திப்போம்! செயலாற்றுவோம்!

**— சி. கவிக்குமார்**

---

## தந்தை பெரியார் திராவிடர் கழகம்

**(இ ம, இயின் சமுதாய அமைப்பு)**

தென்மாவட்டங்களின் துவக்க விழா
24-முதல் 28—4—85 முடிய 'ஞானகுரு
சித்தர் கருவூரார் தென் மாவட்டங்களில் (திருச்சி, மதுரை, முகவை, நெல்லை, குமரி) தமது திருக்கூட்டத்தாருடன் சென்று துவக்குகின்றார்.
பெரியார் தொண்டர்களும்; இயக்க அடியார்களும் ஒருங்கிணையும் விழா!
ஒருங்கிணைவோம்! தமிழர் நல எதிர்ப்பை முறியடிப்போம்

## தந்தை பெரியார் திராவிடக் கழக அமைப்பு


பொதுச் செயலாளர்: **சோ. இரவீந்திரன்** [சென்னை]
கொள்கைப் பரப்புச் செயலாளர்: **பெரி. முத்தையா** [மதுரை]
நிறுவன அமைப்பாளர்: **வெ. செகதீசன்** [மதுரை]
நிர்வாகப் பொறுப்பாளர்: **ந. தயாளன்** [மதுரை]
தலைமை அலுவலக இருப்பாளர்: **ந. சண்முகம்** [சென்னை]

தலைமை அலுவலகம்: 24/1. புத்தகரம் கிராமம்.
இலட்சுமிபுரம் (P O) சென்னை 600099.

தொடர்பு: தலைமைப் பொறுப்பாளர் **சி கவிக்குமார்**
56, N.G.O. காலனி, பொன்னேரி-601204


---


KVS பிரிண்டர்ஸ் பொன்னேரி.